| | |
|---|---|
| | **வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி**<br>**இரண்டாம் தவணைப்பரீட்சை - 2018** |
| **தரம் - 3** | **சுற்றாடல்சார் செயற்பாடுகள்** நேரம் : 1 மணி |
| சுட்டெண் : | புள்ளி |

**01. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) வீட்டில் எமக்கு நற்பண்புகளைச் சொல்லித் தருபவர்கள்.
1) பெற்றோர் 2) ஆசிரியர் 3) மதகுரு

2) எமக்குத் தீமை செய்யும் பிராணி.
1) வண்ணத்துப்பூச்சி 2) மயிர்க்கொட்டி 3) தேனீ

3) தேசியக்கொடியை ஏற்றிய பின்னர் பாடப்படும் கீதம்.
1) கடவுள் வாழ்த்து 2) தேசியகீதம் 3) பாடசாலைக்கீதம்

4) இலங்கை சுதந்திரம் பெற்ற ஆண்டு.
1) 1945 2) 1946 3) 1948

5) மருத்துவ குணமுடைய பூவைத்தரும் தாவரம்.
1) வேம்பு 2) வாழை 3) பனை

6) நத்தைகளைப் பிடித்து உண்ணும் பறவை.
1) கிளி 2) கொக்கு 3) செண்பகம்

7) ஆகாயத்தோட்டி என அழைக்கப்படும் பறவை.
1) ஆந்தை 2) காகம் 3) சேவல்

8) கட்புல செவிப்புல சாதனங்களில் ஒன்று.
1) தொலைக்காட்சி 2) தொலைபேசி 3) வானொலி

9) புரதச்சத்துள்ள உணவு
1) மரவள்ளி 2) வல்லாரை 3) பருப்பு

10) நுளம்பினால் ஏற்படும் நோய் அல்லாதது.
1) மாலைக்கண் 2) டெங்கு 3) மலேரியா

(20 புள்ளிகள்)



kalvi.lk

**2) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

*1) ஆசிரியர் சொற்படி நடத்தல் நன்று.* ( )

*2) தேசிய கீதத்தை இயற்றியவர் மு.நல்லதம்பி ஆவார்.* ( )

*3) சமய விழாவின்போது பௌத்தர்கள் வெற்றிலை கொடுத்து வரவேற்பர்.* ( )

*4) முன்னோர்கள் தங்கத்தை அளக்க் மஞ்சாடி வித்தைப் பயன்படுத்தினர்.* ( )

*5) நாம் பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் தவறாகும்.* ( )

*(10 புள்ளிகள்)*

**3) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

*( பாதுகாப்பற்ற / தியவன்னஓயா / வெள்ளைநிற / நீர்க்குழாய் / கலப்புணவை )*

*1) நாம் தினமும் ............................................... உட்கொள்வோம்.*

*2) முட்புதர்கள் உள்ள இடம் ............................................... இடமாகும்.*

*3) நகர்ப்புறங்களில் நீர் ............................................... மூலம் பெற்றுக் கொள்ளப் படுகிறது.*

*4) இலங்கையின் பாராளுமன்றத்தை சுற்றி ............................................... ஓடுகிறது.*

*5) பாதசாரிகள் வீதியைக் கடக்கும் போது ....................................................... கோட்டினால் கடக்க வேண்டும்.*

*(10 புள்ளிகள்)*

**4) இணைக்குக.**

| | |
|---|---|
| *1) பல கடதாசிகளை இணைத்தல்* | *மாடு* |
| *2) தொற்றுநோய் பரப்புதல்* | *பிணைகருவி* |
| *3) பயிருக்குப் பசளையாகப் பயன்படுவது* | *நற்பண்புகள்* |
| *4) சூடு மிதித்தல்* | *கூட்டெரு* |
| *5) அன்பு , கருணை, இரக்கம்* | *வீட்டு ஈ* |

*(10 புள்ளிகள்)*

**5) வினாக்களுக்கு விடை தருக.**

*1) தமிழர்களின் பண்டிகைகள் 2 தருக?*

............................................ ....................................................

*2) மரங்களின் பயன்கள் 2 தருக?*

.................................................... ....................................................



kalvi.lk

*3) பாதுகாப்பிற்காக ஓட்டினுள் ஒளிந்து கொள்ளும் பிராணிகள் 2 தருக?*

........................................................................................................................

*4) பழுதடைந்த உணவின் தன்மைகள் 2 தருக?*

........................................................................................................................

*5) நீரைச் சுத்திகரிக்கும் 2 முறைகள் தருக?*

........................................................................................................................

*(20 புள்ளிகள்)*

**6)** பின்வரும் பாடலை பூர்த்தியாக்குக.

*உண்ண ......................................... தந்திடும்*


*......................................... வாழ்க .........................................*

*மண்ணை உழுது ......................................... பயிர்களை*

*......................................... உழவர் வாழ்கவே*

*(10 புள்ளிகள்)*

**7)** பின்வரும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.



*(10 புள்ளிகள்)*

**8)** பின் ... க.



kalvi.lk

*1) ஔயாகே வயச கீயத? ..........................................................................................................*

*.............................*

*2) பந்தி காமரய ...........................................................................................................*

*..................................*

*3) பிச்ச மல ...............................................................................................................*

*.....................................*

*(06 புள்ளிகள்)*

**9)** பி ... ங்கிலச் சொற்க





Education கல்வி අධ්‍යාපන

*1) ........................................................................... 2) ...........................................................*

*................*

*(04*



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page